# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை – 2020

### தரம் - 10 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

பெயர் / சுட்டெண் : .....................

திரு.சு.காயத்திரி , NDT (ICT)

**1ம், 2ம் அலகுகளை அடிப்படையாகக் கொண்டு எல்லா வினாக்களிற்கும் விடையளிக்குக.**

**பகுதி I**

1. கணினிகளின் பரிணாம வளர்ச்சியில் திரிதடையத்தால்( transistor) ஒன்றிணைந்த சுற்றாக (IC) மாற்றீடு செய்யப்பட்டதோடு பின்பு ஒன்றிணைந்த சுற்று நுண்முறைவழியாக்கியாக மாற்றீடு செய்யப்பட்டது. இச் செயன்முறையில், கணினியின் ............................ குறைவடைந்ததோடு .................................... அதிகரித்தது.
   1) செலவு, வினைத்திறன் 2)பௌதிகஅளவு,வினைத்திறன்
   3) கொள்ளளவு, செலவு 4) கொள்ளளவு, பௌதிக அளவு

2. தரவிலிருந்து தகவலிற்கான பின்வரும் மாற்றீட்டிற்கான பொருத்தமான சொல்லினைத் தெரிக.
   தரவு -----> .................. ------> தகவல்
   1) செய்முறை 2) அபிவிருத்தி 3) பரீட்சித்தல் 4) அமுல்படுத்தல்

3. கீழே தரப்பட்ட சாதனங்களை கருதுக.
   A – வரையி B – வரைகலை சிறுமேசை C – வருடி
   மேற்குறித்தவற்றுள் கணினியில் உள்ளீட்டுச் சாதனம் / சாதனங்களாகப் பயன்படுத்தக் கூடியது எது / எவை?
   1) A யும் B 2) B யும் C 3) A யும் C 4) மேற்கூறிய அனைத்தும்

4. வீதிப் போக்குவரத்து பாதுகாப்பினை மேற்கொள்ளுவதற்காக பயன்படுத்தப்படும் கமரா வகை எது?
   1) இலக்கமுறைக்கமரா 2) வலைக்கமரா 3) CCTV கமரா 4) மேற்கூறிய எதுவுமன்று

5. பின்வரும் நினைவகங்களில் தரவினை கையாளும் வேகம் குறைவடைந்து செல்லும் ஒழுங்கு எது?
   1) பதிவகம், RAM, பதுக்கல் நினைவகம், ROM
   2) ROM, RAM, பதுக்கல் நினைவகம், பதிவகம்
   3) பதிவகம், பதுக்கல் நினைவகம், RAM, ROM
   4) பதிவகம், பதுக்கல் நினைவகம., ROM, RAM

6. நினைவகத்தில் உள்ள செய்நிரல்களை ஊதா நிற கதிரினால (ultra waves) அழித்து மாற்றக்கூடிய நினைவகவகை எது?
   1) True-ROM 2) PROM 3) EPROM 4) EEPROM

7. பதுக்கல் நினைவகத்தின் பிரதான பயன்பாடு,
   1) முறைமையின் கோப்புக்களை சேமித்து வைத்திருக்கும்.
   2) தரவினை நிரந்தரமாக சேமித்து வைத்திருக்கும்.
   3) அடிக்கடி பயன்படுத்தும் தரவினை தற்காலிகமாக சேமித்து வைத்திருக்கின்றது.
   4) மேற்கூறிய எதுவுமன்று

8. தொடர்குதையில் காணப்படும் கம்பிகளின் எண்ணிக்கை யாது?
   1) 15 2) 25 3) 10 4) 9

9. கணினி நினைவகமானது (RAM) 8GB கொள்ளளவுடையது. நினைவகத்திற்கு சமவலு கொள்ளளவுடைய அளவு எது?
   1) 8192 Bytes 2) 8192 KB 3) 8192 MB 4) 8192 GB

10. தொடராக தரவினை கையாளப்பயன்படுத்தப்படும் சாதனம் எது?
1) காந்தவியல் நாடா
2) வன்வட்டு இயக்கி
3) நெகிழ்வட்டு இயக்கி
4) பளிச்சீட்டு செலுத்தி

11. கீழேதரப்பட்டவற்றில் மையமுறைவழியலகினுள் செய்நிரலானது தொழிற்படும் விதமாக அமைவது?
1) வன்வட்டிலிருந்து தரவும் அறிவுறுத்தலும் எடுத்துவரப்படும்.
2) தற்போகு பெறுவழி நினைவகத்திலிருந்து தரவும் அறிவுறுத்தலும் எடுத்துவரப்படும்.
3) அறிவுறுத்தலானது வன்வட்டிலிருந்தும் தரவானது தற்போக்கு பெறுவழி நினைவகத்திலிருந்தும் எடுத்துவரப்படும்.
4) அறிவுறுத்தலானது தற்போகு பெறுவழி நினைவகத்திலிருந்தும் தரவானது வன்வட்டிலிருந்தும் எடுத்துவரப்படும்.

12. கோப்பின் கொள்ளளவானது உயர்வாகக் காணப்படுவது எது?
1) .psd file of 10KB
2) .doc file of 10KB
3) .psd file of 15KB
4) .doc file of 20KB

13. இணையத்தொடுப்பினை ஏற்படுத்தும் போது கணினி வலையமைப்பால் ஏற்படக்கூடிய நன்மை எது?
1) தீங்குவிளைவிக்கக்கூடிய மென்பொருளின் வருகையினை குறைத்தல்.
2) வலையமைப்பில் தரவுகளை பரிமாற முடியும்.
3) கோப்பு மற்றும் கோபுறைகளை பயன்படுத்துதல்.
4) தனிநபர்கணினியில் உள்ள கோப்புகள் அழிக்கப்படுதல்.

14. G2G சேவைகள் தொடர்பான சரியான கூற்று எது?
A – வருடாந்த சுற்றுலாவாக சிங்கராஜா வனத்திற்கு செல்லல்
B – சுற்றுலாப்பயணிகளிற்கான வரைபடம்
C – அரசாங்க சட்டதிட்டத்திற்கு அமைவாக நீதிமன்றத்தில் குற்றவழக்கினை நடத்துதல்
1) A யும் B யும்
2) B யும் C யும்
3) A யும் C யும்
4) மேற்கூறிய அனைத்தும்

15. வகுப்பறை சூழலினை கவர்ச்சிகரமாக மேற்கொள்ளுவது தொடர்பான கூற்று எது?
1) கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிற்காக சூட்டிகைபலகைகளைப் பயன்படுத்துதல்.
2) கரும்பலகையையும் வெண்கட்டியையும் பயன்படுத்தி கற்பித்தலை மேற்கொள்ளல்.
3) பாடப்புத்தகத்திலிருந்து கல்விசார் தகவல்களை பெற்றுக்கொள்ளல்.
4) மேற்கூறிய எதுவுமன்று.

16. பிரயாணமும் அதனுடன் தொடர்புபட்ட செலவீனங்களின் இடையூறுகளை குறைப்பதற்கான கற்றல் கற்பித்தல் செய்முறைக்கு உதவுவதான அமையாத வகை எது?
1) இணையவழிக் கற்றல்
2) கற்றல் முகாமைத்துவ முறைமை
3) மின்வழி கற்றல்
4) வகுப்பறை கற்பித்தல்

17. உடலின் வேறுபட்ட பாகங்களை முப்பரிமாண வடிவில் பார்வையிட்டு நோயினை கண்டறியப் பயன்படும் சாதனம் எது?
1) CAT
2) MRI
3) ECG
4) EEG

18. வைத்தியசாலையிலுள்ள சிறப்புத்தேற்சி பெற்ற வைத்தியர் ஒருவரின் சிகிச்சையினை, தொலைவிலுள்ள நோயாளியிற்கு அனுபவம் மிக்க ஒருவரால் வழங்கப்படும் செயற்பாடானது,
1) தொலை சத்திரசிகிச்சை
2) தொலை மருத்துவம்
3) தொலை பயிற்சி
4) மேற்கூறிய எதுவுமன்று

19. கணினி வன்பொருள் தலைமுறை மாற்றத்தில் நெசவுப் பொறியானது யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
1) Joseph Jacquard
2) Pascal
3) Charles Babbage
4) Howard Aiken

20. அடா ஒகஸ்டா லவ் லேஸ் இனால் உருவாக்கப்பட்ட மொழியின் வகையானது எது?
1) இயந்திர மொழி
2) உயர்மட்ட மொழி
3) ஒருங்குசேர்ப்பி மொழி
4) செயன்மட்ட மொழி

( 2 X 20 = 40 புள்ளிகள் )

## பகுதி II

1)

1. G2E சேவைகள் இரண்டினைத் தருக.
2. மூளையின் செயற்பாட்னை பதிவதற்காகப் பயன்படும் சாதனம் எது?
3. பெரும்பரப்பளவைக் கொண்ட பண்ணை ஒன்றில் மிருகங்களின் எண்ணிக்கையை கணிப்பதற்கு பயன்படும் சாதனம் எது?
4. ரோபோவினைப் பயன்படுத்துவதன் நன்மைகள் இரண்டினை எழுதுக.
5. தொடர்நிலை(online) வியாபாரத்தின் நன்மைகள் இரண்டினை எழுதுக.
6. தகவல் தொடர்பாட் தொழிநுட்பவியலின் குறைபாடுகள் இரண்டினை எழுதுக.
7. சாள்ஸ் பபேஜ் இனால் கண்டுபிடிக்கப்பட்ட கணினியோடு தொடர்புபட்ட அடிப்படை எண்ணக்கருவினை உள்ளடங்கிய சாதனம் எது?
8. முதலாவது செய்நிரலாளர் யார்?
9. கூட்டற்பொறியிலுள்ள அடிப்படைத் தொழிற்பாடுகள் என்ன?
10. கலப்புத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் சாதனம் எது?

(20 புள்ளிகள்)


2) கணித்தலுடன் இலக்கமுறை மாற்றீடினைச் செய்க.

1. இரும எண்ணிலிருந்து பதின்ம எண்ணிற்கு,
   1) 110110   2) 10101011   3) 1111100
2. பதின்ம எண்ணிலிருந்து எண்ம எண்ணிற்கு,
   4) 98   5) 340   6) 91
3. பதினறும எண்ணிலிருந்து பதின்ம எண்ணிற்கு,
   7) A1   8) 3BC   9) 4F   10) 78D   (10 புள்ளிகள்)

3)

1. நாடாவும் நெகிழ்வட்டும் எந்தத் தலைமுறையில் பயன்படுத்தப்பட்டது?
2. ENIAC முறைமையானது கண்டுபிடிக்கப்பட்ட தலைமுறை எது?
3. 5ந் தலைமுறையில் பயன்படுத்தப்பட்ட வன்பொருள் தொழில்நுட்பம் எது?
4. பணிசெயல்முறைமையானது அறிமுகப்படுத்தப்பட்ட தலைமுறை எது?
5. துளையட்டையானது அறிமுகப்படுத்தப்பட்ட தலைமுறை எது?   (10 புள்ளிகள்)

4) கணினி முறைமையின் அடிப்படை தொழிற்பாடினை வரைபடமானது காட்டுகின்றது.




1. முகப்பு அடையாளம் E ல் உள்ள பகுதிகள் மூன்றினை எழுதுக.
2. பயனருக்கு தரவினை காட்சிப்படுத்துவதற்கான முகப்பு அடையாளத்தின் பெயரினை எழுதுக.
3. முகப்பு அடையாளம் D ற்கு ஒரு உதாரணம் தருக.
4. முகப்பு அடையாளம் B ன் இயல்பு ஒன்று தருக.
5. முகப்பு அடையாளம் B ல் பயன்படுத்தப்படும் சாதனம் எது?   (10 புள்ளிகள்)

5)

1. தரவுத்தொடர்பாடல் முறைமையின் மூன்று அடிப்படை பகுதிகளையும் எழுதுக.
2. ஏனைய ஊடகங்ளைவிட மிகவும் வேகமாக தரவினை கடத்தும் ஊடகம் எது?
3. வானொலி அலை பயன்படுத்தபடும் தொழில்நுட்பம் இரண்டு தருக.
4. தரவுத்தொடர்பாடல் வழிகள் மூன்றினையும் தருக.   (10 புள்ளிகள்)


kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457